# இந்துசாதனம்.

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

(1889)

**பத்திரக் கிரயம்.**

யாழ்ப்பாணப் பட்டினம்: ஷ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

**விளம்பர விகிதம்.**

முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5-00
,, காற்கலம் ரூ. 3-15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௬. } யாழ்ப்பாணம்:—குரோதனஞு ஆனிமீ ௨; (1925 ஜூன் 15) திங்கட்கிழமை } இலக்கம்—௬௫.


உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானுர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்ருள்வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர நாமமே
சூழ்க வையக மூந்துயர் தீர்கவே.

## இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டிவெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் தப்புரவாக வேலைமுடித்த முரசுகுத்தி தெங்காதரக்கொடி கைசோர்வை, முகப்புகொடி, காஞ்சி அரணுக் கொடி, கால் தண்டை, கொலுசு, வகைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல்தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டு பருத்தி முதலிய ஜவுளி தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தொ. வெ. சென்னிசெட்டி & சன்ஸ்
சராப், ஜவுளி வியாபாரம்
(H. 31) குகை சேலம் தென் இந்தியா.

[ESTABLISHED 1609.]

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
**Kairul Muslimeen Medical Hall**
**PORTONOVO** (*SouthArcotDistrict*).

## ஏ ஜ ண் டு தே வை.

குழிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வதுபோல்
வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்
அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா **1000** இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவநதையு மடைவிக்கச் செய்யவில்லையென்ருவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் சந்தோஷிக்கச் செய்வது

உ த் த ர வா த மு ள் ள து.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லற இன்பவாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய கலன்களை அடையக்கூடியதுமான ஒப்பற்றஓர்புருஷசஞ்சீவியாகின்றது. மற்றவிபரங்களை நமதுகேட்லாக்கில்காணலாம்.

**லேகியத்தின் முக்கிய குணமாவது**

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, ஏழுவகைத்தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்ச்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்த்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், SPERMATORRHEA, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, NERVOUSDISEASES, ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி, புதியமேனியுடன் இரத்த விர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனனுகூல நன்மைக்காக இதனை மிகவும் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றோம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.
வி. பி. தபாற் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினுல் V. P. தபாற்செலவு இனும். பினங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசிகள் மருந்தின் கிரையமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். வெளியூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது மைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்ருவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்ருவது கடவுளுக்குப் பொதுவாய் ருபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயமும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ருபித்தும் இனுமுடையபணமும் கிரயமும் கொடுபடா விட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரியகுணமுண்டென்ருவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தைச் செய்து காட்டினுலாவதுமுன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

TEL. ADDRESS:—
Khader Bros.
Porto Novo
(Y. 38).

என்மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னுற்காடு ஜில்லா.

## சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பலமாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அண்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்: வேணுகோபால், சேலம்.

(H 32.)

## உங்கள் உணவின் உருசி.

சமையல்பாகத்திற் கெட்டுப்போகாமலிருக்க எப்பொழுதும் பிரக்கியாதிபெற்று விளங்கும்

**ருக்மணி குக்கர்**

சமையல் அடுக்கில் சமையல் செய்யுங்கள். சாதமும் 4, 5 பதார்த்த வகைகளும் இரண்டு முதல் எட்டுப்பேருக்கு, ஒரேமணி நேரத்தில் சொற்ப செலவில் தொந்தரவில்லாமலே தயாரிக்கலாம். உணவின் உருசியும் சத்தும் [illegible] திருக்கும். மாணவர் பிரமாணிகள் முதலியோருக்கும், வீடுகளுக்கும், தனித் தவர்களு [illegible] உடனே [illegible]. விலை 18 ரூபா முதல் 33 வரை [illegible] இனும்

**ருக்மணி குக்கர் கம்பெனி,**
(H) இராயபுரம்,
சென்னபட்டினம்.

(Y. 45.)

25-8-23 ல் சென்னையில் நடந்த தமிழ்வைத்திய கான்பரன்ஸ் & கண்காட்சியில் இவர் மருந்துகள் தேவ ஔஷதங்களென்று தங்க மெடலும் வைத்தியபதிப்பட்டமும் பெற்றவர்.

உலகெங்கும் புகழ்பெற்று அநேக பரிசுகள், நற்சாக்ஷிகள் பெற்றது!

நமது ஜீ. ஏ. மாத்திரை 50 வாங்குவோர்கட்கு ரூபா 2 விலையுள்ள "மாந்திரீக ரக்ஷை" ஆர்டருடன் தேவை என்று எழுதுபவர்கட்கு மட்டும் இனுமாய் (1) அனுப்பப்படும்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட ஆறுமணி நேரத்தில் கொடுக்கும்.

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை (கைகண்டது)**

இதுவரையிலும் எவராலும் கண்டு பிடிக்கப்படாத ஓர் அபூர்வ மருந்து.
அபூர்வசக்தி வாய்ந்தது! ஆச்சரியகுணமுள்ளது!! இதை ஒரு முறை பரீக்ஷை பாருங்கள்

வீரியத்தைக் கெட்டிப்படுத்தும்; தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றி, புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையிற் பரீக்ஷை பார்க்கலாம்! பத்தியமில்லை.

150-பில்ஸ் ரூ 10-0-0 50-பில்ஸ் ரூ. 4-0-0 20-பில்ஸ் ரூ. 2-0-0 வி. பி. சார்ஜ் வேறு.

நற்சாக்ஷி மதராஸ் S. ஸ்ரீனிவாஸய்யங்கார் எழுதுவதை கவனியுங்கள்.

பலஹீனம் நரம்புத்தளர்ச்சி ஞாபகசக்திக்குறைவால் வருந்திக்கொண்டிருந்தேன் அதற்காக நான் அநேக டாக்டர்களிடம் சாப்பிட்டு ஒன்றிலும் குணபடவில்லை. தங்கள் ஜீ. ஏ. மாத்திரைகளைச் சாப்பிட்டு பூர்ண சுகம். வேண்டியவர்கள் இந்த அருமையான மருந்தை வாங்கி யருந்தித் தேகத்தைப்பலப்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதே எமதுவிருப்பம். (இதற்கு கியாரண்ட் கொடுக்கப்படும்).

## பிரமேக நிவர்ரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும் பொறுக்க முடியாத வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, எரிச்சல், குத்து உடனே நிற்கும் புட்டி ரூபா 2-0-0.

நற்சாட்சி:—கண்டி, சிலோன் கு. மதார்சாய்பு எழுதுவதைக் கவனியுங்கள்.

உங்கள் பிரமேகநிவாரணியைச் சாப்பிட்டதில் ......உடம்பு இப்போது பூரணசுகம். இன்னொரு ஆளுக்கு வேண்டியதாயிருக்கின்றது. ஒரு புட்டி உடனே அனுப்பவும்.

## புஷ்பிக ரோஸ் பற்பொடி.

பொறுக்க முடியாத பல்வலியை ஒருநொடியில் நிறுத்தும். பல்வலி, பல்லரணை, ஈகிர் சுரவு, ஈகிர் வீக்கம், புழுக்குடைச்சல் முதலிய வியாதிகளை நீக்கி ஆயுள்பரியந்தம் தந்தரோகம் அணுகவொட்டாது. 4 டின் ரூபா 1. டஜன் ரூபா 2-8-0 பெரியபாகெட் 1-க்கு ரூபா 2-0 0 வியாபாரிகளுக்கு 6-டஜன் ரூபா 13-0-0 12 டஜன் ரூபா 25. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

5-7-22-ல் சுதேசமித்திரன் தங்கள் பேப்பரில் வெளியிட்ட அபிப்பிராயம்:—பல்துலக்குவதற்கு ரம்மியமாயும் நல்லவாசனையுடனிருக்கின்றன, வேண்டுபவர்கள் பழனி, டி. ஆர். கெ. இடம் பெற்றுக்கொள்க.

**கெர்ப்ப சஞ்சீவி எண்ணெய்.**

பஹிஷ்டை காலத்தில் உண்டாகும் வயிற்றுவலியை மிக்க ஆச்சரியமாய் அந்தக்ஷணமே நிறுத்தும் காலாகாலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். பலஹீனம், மலபந்தம், சிரம் இளைக்கும் தன்மை கெர்ப்ப நோய் சம்பந்தமான சகலவியாதிகளையும் நீக்கும். புட்டி ரூபா 2.

**மாந்திரீக ரட்சை.**

இதை அணிந்து கொண்டால் சகல வசியம், தனலாபம், நினைத்தகாரிய சித்தி, புத்திரசந்தானம், தொழில் அபிவிருத்தி, உண்டாகும். செய்வினை, பேய், பிசாசு அணுகாது; குழந்தைகளின் பிணிமுதலியன நீங்கும். ரக்ஷை 1-க்கு ரூபா 2. ரக்ஷை 6-க்கு ரூபா 9. முக்கியமான காரியங்களுக்கு ஸ்பெஷலாக வேண்டியதை செய்தனுப்பப்படும் ரக்ஷை ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், மற்ற மலாய் தேசவாசிகள் மருந்தின் கிரயமும், பார்சல் செலவு ரூபா 2-ம் சேர்த்து முற்பணம் அனுப்பினுல் மட்டிலருந்து அனுப்பப்படும்.

**வைத்தியபதி, டி. ஆர். கருப்பணபிள்ளை,**
ஆயுள்வேத வைத்தியசாலை, பழனி.

Q 56. B.)

## மிருகத்தின் கொழுப்பு மலிவுதான்;

ஆனல் அது சேர்ந்தால் நல்ல தைலமுண்டாகாது. மிருகக் கொழுப்பினுல் தைலம் செய்வது சுலபமே. விலையும் சரசமாகும்.—ஆனல் அது பொதுஜனங்கள் மனதிற்கு ஒப்பாது.

**லிட்டில்ஸ் ஓரியன்டல் பாம்.**

செய்வதில் இந்தத் தூர்நாற்றமுடைய மிருகக் கொழுப்பு விலக்கப்படுகிறது. ஆகையினுலே அது மிகவும் உயர்ந்த மருந்தாகிறது. மனதிற்கு ஒத்துமிருக்கிறது.

5—L—25.




(Y. 41. c.)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ௵ ஆவணி ௨௯ திங்கட்கிழமை

## சைவர்கட்குரிய இரு ஸ்தாபனங்கள்.

இலங்கையிலே சைவசமயத்தை விருத்திசெய்யும் நன்னோக்கங்கொண்டு இற்றைக்கு முப்பத்தைந்து முப்பத்தாறு வருடங்கட்கு முன்னர் யாழ்ப்பாணத்துள்ள சைவாபிமானச்சிலர்களால் ஸ்தாபிக்கப்பட்டு இனிது நடைபெற்றுவரும் ஸ்தாபனங்கள் இரண்டாகும். இவைகளுள் ஒன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி. மற்றையது இந்துசாதனப் பத்திரிகை.

சைவசமயச் சிறுவர்கள் தஞ்சமய அனுஷ்டானங்கட்கு யாதும் பங்கமின்றிக் கற்றற்கான ஒரு ஆங்கில வித்தியாசாலை யாழ்ப்பாணத்தில் ஆவசியகம் இருத்தல்வேண்டுமென்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்களுடைய உள்ளக்கிடக்கையாக விருந்ததென்று சொல்வர். நாவலரவர்கள் காலத்தில் அவர்கள் கொண்ட நோக்கம் நிறைவேறுதொழிந்ததாயினும், அவர்கள் சிவபதமடைந்து சிலவருடஞ் சென்றபின் இங்குள்ள சைவாபிமானச் சிலர்கள் இற்றைக்கு முப்பத்தாறு வருடங்கட்கு முன் ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையை வண்ணார்பண்ணையில் ஆரம்பித்து நடத்தினர். அதுவே இப்பொழுது யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியென்னும் பெயருடன் விளங்குவதாம். இதுவே யாழ்ப்பாணத்தில் முதன்முதல் ஸ்தாபிதமான சைவஆங்கில வித்தியாசாலையாகும். இதனை ஆரம்பித்த சைவாபிமானிகளின் விடாமுயற்சியினாலும் மற்றுஞ் சைவநன்மக்களின் அபிமானத்தினாலும் அரசினர் உதவியினாலும் மலாய்நாட்டில் உத்தியோகமாகவிருக்கும் சைவநன்மக்களின் திரவிய சகாயத்தினாலும் ஆரம்பத்தில் ஒரு சைவ ஆங்கில வித்தியாசாலையாக விருந்த இந்த ஸ்தாபனம் இப்பொழுது யாழ்ப்பாணத்திலே ஒரு சிறந்த கல்லூரியாக விளங்குகின்றது.

இக்கல்லூரிக்கு இப்பொழுது இருக்கும் விடுதிச்சாலை போதாமையினால், மிகவிசாலமான ஒரு விடுதிச்சாலையை அமைத்தற்காக, மேற்படி கல்லூரி நிலத்திலேயே சென்றவாரம் ஒரு சுபமுகூர்த்தத்தில் அஸ்திபாரம் இடப்பட்டிருக்கின்றது. இதனை நிறைவேற்றுவதற்கு 50,000 ரூபாவரையில் மதிப்பிடப்பட்டிருக்கின்றது. இவ்விஷயமாகத் திரவிய சகாயம் பெறும்பொருட்டு இக்கல்லூரிப் பிரதமாசிரியராகிய மிஸ்ரர் நெவின்ஸ் செல்வத்துரையவர்களும் ஸ்ரீ வியாகேசனவர்களும் மலாய்நாட்டிற்குச் சென்று ஆங்குள்ள அபிமானிகளிடமிருந்து பொருள் சேர்க்கின்றனர். யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் மற்றும் பாகங்களிலும் வசிக்கும் ஏனைய அபிமானிகளும் இந்த வித்தியா ஸ்தாபனம் நிறைவேறும்பொருட்டுத் தங்களால் இயன்ற பொருளுதவி செய்தல் வேண்டும்.

மற்றைய ஸ்தாபனம் யாம் மேலே சொல்லியபடி இந்துசாதனப் பத்திரிகையேயாம். இப்பத்திரிகை இற்றைக்கு 36 வருடங்கட்கு முன்னர் யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபையாரால் ஆங்கில தமிழ்ப் பத்திரிகையாக பட்சத்துக்கொருமுறை வெளியிடப்பட்டுக் காலகதியில் விருத்தியெய்தி, இப்பொழுது தமிழும் ஆங்கிலமும் தனித்தனிப் பிரசுரங்களாக வாரமிருமுறை வெளிவருதலைச் சைவநன்மக்கள் எல்லாரும் அறிவர். சைவசமய விஷயமாகவும் தமிழ்மொழி விஷயமாகவும் அரசியல் விஷயமாகவும் தமிழ்ச் சாதியாரின் ஏற்ற விஷயமாகவும் இப்பத்திரிகை அக்காலந் தொடக்கம் இற்றைவரையில் இயன்றளவிற்கு உழைத்துவருகின்றது. இது சைவாபிமானிகளாற் பேரிதும் அபிமானிக்கப்படுவது. யாழ்ப்பாணத்திலும் இலங்கையின் மற்றும் பகுதிகளிலும் மலாய்நாட்டிலும் வசிக்கும் சைவநன்மக்கள் இப்பத்திரிகையை அன்னைபோல் ஆதரித்து வருகின்றார்கள். இது காலந்தோறும் விருத்தியடையும்வண்ணம் பெருந் துணை புரிந்து வருபவர்களும் இச்சைவநன்மக்களேயாம். சைவநன்மக்களுக்குச் சிறந்த சாதனமாகவுள்ள இப்பத்திரிகையை பிறவூரில் சகுமார்த்தமாக வசிக்கும் யாழ்ப்பாணத்தவர்கள் தாயகமாக மதித்துவருகின்றார்கள். இப்பத்திரிகைக்கு யாதேனும் இடையூறு விளைக்க நினைப்பவர்கள் சமயத்துரோகிகளென மதிக்கப்படுவர். அந்நிய சமயத்தினரால் இதற்கு யாதும் இடையூறு வருமேல் அதனை நீக்கி வைப்பது சைவநன்மக்கள் கடனாகும். ஆனால் இறைவனருளால் எவ்வகையான இடையூறும் இதற்கு வாராதென்பதே எமது நம்பிக்கை.

## சேக்கிழார் நாயனாரின் சிவகைங்கர்யம்.

குன்றத்தூர் வேளாளர் குலத்தில், சேக்கிழார் மரபிலே மெய்யடியார் ஒருவர் திருவவதாரஞ் செய்தார். அம்மரபு [illegible] விளங்கியமையினால் அவருக்குச் சேக்கிழார் என்னும் நாமம் உண்டாயது. அவர் முற்செய்தவங்களிற் செய்துகொண்ட தவவிசேடத்தினால் சகல கலைஞானங்களையும் அதிபால்யத்திற் கற்றுணர்ந்தார். அவரது உத்தமகுணங்கள் அவர் ஓர் அவதார புருடரென்பதைப் புலப்படுத்தின. "அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்" என்றபடி அக்காலத்துச் சோழநாட்டை அரசுபுரிந்த அநபாய சோழராசன் சேக்கிழாரது பெருமையைக் கேள்வியுற்று அவரைத் தன் அரண்மனைக்கு இராச வரிசையுடன் அழைத்துத் தக்கவாறு உபசரித்தான். அவர் திறமையை நேரிற் கண்டவுடன் தன் மந்திரி உத்தியோகத்தையுங் கொடுத்து "உத்தம சோழப் பல்லவன்" என்னும் பட்டத்தையும் சூட்டினன். சேக்கிழார் தமது மந்திரி உத்தியோகத்தைத் திறமையுடன் நடாத்திவருங் காலத்திலே தமது ஜெநநபூமியாகிய குன்றத்தூரிலே ஒரு சிவஸ்தலம் அமைப்பித்தார். அதற்குத் திருநாகேச்சுரம் எனப் பெயரிட்டு அங்கு வேண்டிய நித்திய நைமித்திகங்களையும் குறைவின்றி நடாத்திவரலாயினர்.

இங்ஙனமாகச் சில வருடங்கள் கழிந்தன. பல்லாண்டுகளுக்குமுன் எமது சமயாசாரியர்களுடன் பெருவாதிட்டு மடிந்தொழிந்த சமண் முதலாம் பரசமய இருள் பின்னருந் தலைகாட்டத் தொடங்கியது. சமண குருமார் ஒருசிலர் பொய்யை ஓர் காவியமாகக்கற்பித்துச் 'சீவகசிந்தாமணி' எனப் பெயரிட்டு, அதனைப் போதிக்கத் தலைப்பட்டனர். "தாய்க்கொலை சால்புடைத்து என்பாரும் உண்டு" என்றபடி பொய்ச் சமயமாயினும் அதனைத் தழுவுவாரும் ஒரு சிலர் எக்காலத்தும் எங்குமுளராவர். சிறிதுகண்ணியமுள்ள சமண குருமார் அநபாயசோழனிடம் நண்பு பூண்டொழுகுவாராயினர். அந்நட்பு வரவர வளர்ந்தது. காலகதியில் அரசன் அக்குருமாரிடத்திற் பூரண நம்பிக்கை வைத்துவிட்டான். சமண குருமார் தமது கருமத்தை நிறைவேற்றுவதற்கு இதுவே தருந்தருணமென எண்ணினர்கள். அரசன் ஆனந்தமாக அரியாசனத்தில் அமர்ந்திருக்குங் காலங்களிற் சமணகுருமார் பல விஷயங்களையும்பற்றிப் பேசுவர்; இடையிடையே சமயோசிதமாகச் சீவகசிந்தாமணியிலுள்ள சரிதங்கள் சிலவற்றை வெளியிடுவர்; அவை தமது சமய சம்பந்தமானவை என்பதை மறைத்துப் பேசப்படும் விஷய சம்பந்தமாகத் தொடுத்துச் சொல்வர். இங்ஙனம் நிகழும் நாட்களில் சீவகசிந்தாமணியிடத்தே அரசன் அதிக நம்பிக்கை வைக்கத் தலைப்பட்டான். அரசவையிலுள்ள வேறுசிலரும் அரசனைப் பின்பற்றினர்கள். தினந்தோறும் இராச சபையிலே சீவகசிந்தாமணி பாராயணஞ் செய்யப்படலாயது.

அந்நிய சமயிகள் தத்தம் சமயங்களைப் பரப்புவதற்கு இதுபோன்ற பல முறைகளைக் கைக்கொள்வர். இவர்களைப் பற்றி எவரும் எக்காலத்தும் அதிக சாவதானமாக இருத்தல்வேண்டும். இவர்களும் "உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவார்" என்றபடியினுள்ளோராவர். எக்காலத்தும் இவர்களுடைய "உறவு கலவாமை வேண்டும்." மெய்ச்சமயமாகிய சைவசமயத்தில் அவதரித்த அரசர்வழித்தோன்றியமன்னன்—பல சிவன்தலங்களைப் புதிதாய் அமைத்தும் திருத்தியும் அரும்பெருந் தொண்டு பூண்டொழுகிய முடிமன்னர் கால்வழியில் வந்தவேந்தன்—உத்தம சிவபூஜாதுரந்தரனைக் குஞ்சிதபாத நடராசப்பெருமானைத் தினந்தோறும் தரிசிக்கும் நியதி பூண்ட அரசன்—அநபாயனென்று நாயன்மாருள் வைத்தெண்ணப்படும் அடியார்களாகிய கோச்செங்கட்சோழன், புகழ்ச்சோழன் முதலியோரைத் தன்குலத் துதிக்கச்செய்யும்பாக்கியம்பெற்ற அண்ணல்—சாக்ஷாத் பரம்பொருளாகிய நடராசப்பெருமான் சோணாட்டைக்காலந்தோறும் அரசுபுரிந்த வேந்தர்களுக்கு நேர்ந்த இடர்களை யெல்லாம் நீக்குபொருட்டு அங்கு அற்புத திருவிளையாடல் பற்பல செய்தருளியும், காட்சிகொடுத்தும், மோட்ச மளித்தும் பேறுபெற்ற சிவானுபூதிமான்கள் சந்ததியில் அவதரித்த பொருஞ்சிராட்டியன்—சமயாபிமானம், தேசாபிமானம், பாஷாபிமானம், சாதியபிமானம் என்னும் நான்கும் ஒருங்கே சிறந்து விளங்கும் அதிஉத்தமனாகிய இந்த அநபாய சோழராசன் பொய்யவம் தழுவும் அந்நியசமயநெறியிடைப்படலானான். [illegible], சமயக்கல்வி சமயதீட்சை சமயாசாரம் குருவிசுவாசம் அன்பர்பணி ஆலயசேவை ஆதியனவும், பிரமசரியம் இல்லாச்சிரமம் வானப்பிரஸ்தம் சந்நியாசம் என்னும் ஆச்சிரமங்கள் நான்கும் நிலைதளர்ந்துள்ள இக்காலத்து, நாம் பாக்கு எழுத்த சமண்முதலாம் பரசமய இருளான் மூடுண்டு தியங்குதல் கஷ்டமான கருமமன்றோ? அக்காலத்துள்ள சமய குருமார் எமது சமய நூல்கள் கூறும் உண்மைப் பொருளை எடுத்து விளக்கிப் போதியாமையும், எமது சமய குரவர்களது திவ்விய சரிதமும், அவர்கள் பொய்ச்சமயங்களை வேரறுத்துச் சைவசமயத்தை ஸ்தாபனஞ்செய்யுந்தோறும் பாடியருளிய அற்புத அதிமதுர தேவாரத்திருப்பதிகங்களும் சோழன் செவிக்கெட்டாமையும் இவைபோன்ன பிறவும் அரசன் அந்நியசமயப் பிரவேசஞ் செய்தமைக்குக் காரணங்களாம்.

இங்ஙனம் சமணகுருமார் அரசன்முன்னிலையிலே சீவகசிந்தாமணியைப் போதித்துக்கொண்டிருக்கும் ஒருதினம் சேக்கிழார் நாயனார் அங்குச்சென்றார். சமண குருமார் சீவகசிந்தாமணியைப் போதிப்பதையும், அரசன் அவர்கள்வசமாயினமையையும் அறிந்த நாயனாருடைய உள்ளம் பதைத்தது; கோபம் அதிகரித்தது. அவர் சமணகுருமாரைச் சினந்து நோக்கினார். அரசன் அந்நியசமயப்படுகுழியில் வீழாப் பெரும் புண்ணியமுடைய னாதலினாலும், அப்புண்ணியப்பலனை நுகருவிக்கும் பொருட்டுப் பரம்பொருளாகிய சிவபெருமான் அவன் அவள் அது என்னும் முக்கூற்றுப் பிரபஞ்சவாயிலாக ஏற்ற ஏற்ற காலங்களில் நுகரவேண்டியனவற்றைக் கொடுத்தும் விலக்கவேண்டியனவற்றைத் தடுத்தும் அருளுபவராதலினாலும், இந்நாயனார் அங்கு முதன்மந்திரி உத்தியோகம்வகித்து அரசனாலும் பிறராலும் நன்கு மதிக்கப்பெற்று வாழ்பவராதலினாலும் சேக்கிழாருடைய அதிகாரம் அரசன்மீது பிரயோகிக்கப்படலாயது. "அரசே, நீ யாது செய்தனை? இச்சமணரால் உனக்குப் போதிக்கப்படும் நூல் சீவக சிந்தாமணியெனப்படும். அதிலுள்ள விஷயங்களெல்லாம் கற்பனு சரித்திரங்களாம். அவை இம்மைக்கும் உதவா; மறுமைக்கும் உதவா; யாதும் பிரயோசனமுமில்லையாம். சிவபெருமானே முழுமுதற்கடவுள். அவர் 'நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய் நிறைவாய் நீங்காச் சுத்தமுமாய்த் தூரமுமாய்ச் சமீபமுமாய்த் துரியநிறைசுடராய் எல்லாம்வைத்திருந்த தாரகமாய் ஆனந்தமயமாகி மனவாக்கெட்டாச் சித்துருவாய்' உளர். அன்றியும், 'உருவுமருவுங் கலப்புமாயன்றிக் குறியும் உரையுமுணர்ந்தறிவரிதாய்க் குணமெல்லையிலவாய், அருபரமாய் ஆனந்தக்குறியாய் அற்புதமாய் அநாமயமாய் நிராமயமாய் அசலமாயின்பாய், தெரிவரிதாய் அனுபவமாய் முத்த சித்தாய் அணுவாய், செல்கதியாய்ப் பல்லுருவாய்த் தீமை நன்மையின்றாய், உரையிறந்து கரையிறந்த ஒளியாகி வெளியாய் ஓங்குவது தற்சிவமென்றுங் குரைக்கு நூலே' என்னும் ஆன்றோர் வாக்கும் பிறவும் பரம்பொருளைப்பற்றி நன்குவிளக்கும். அத்துணைப் பெருமைவாய்ந்த சைவசமயத்தைக் கைக்கொள்ளாது இருவினைக்கீடாகத் தேகமெடுத்துப்பிறந்துழன்று தடுமாறிப்பேதாபேதமான துறைகளில் எற்றுண்டு பேரிடர்ப்பட்டோரைக் கடவுளெனக் கொள்ளும் சமண்முதலாம் பரசமயங்களுட் புகவொண்ணாது. ஒருவர் பெயரால ஒரு சமயம் வழங்கப்பெறுமெனில் அவர்பிறப்பதற்குமுன் அச்சமயம் இல்லாதிருந்ததென்பதும், இடையிட்டுத் தோன்றிய ஒருவர் பரத்துவம்பெறின் அவர்பிறப்பதற்குமுன் கடவுளில்லையென்பதும் பெறப்படும். மேலேகூறப்பட்ட செய்யுட்கள் விளக்கும் தடத்தலக்கணங்களெல்லாம் அமையப்பெற்ற பரம்பொருளே கடவுளாவர். மக்கட்குரிய பிணி மூப்புச் சாக்காடு முதலியன அக்கடவுளுக்கில்லையாம். 'எல்லார் பிறப்பும்பிறப்பு மியற்பாவலர்தம், சொல்லாற்றெளிந்தோம் நஞ்சோணேசர்—இல்லிற், பிறந்த கதையுங் கேளேம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்த கதையுங் கேட்டிலேம்'. இத்துணை அநந்த கலியாண குணங்களை யுடைய அப்பரஞ்சுடரை உன் மூதாதையர் எல்லோரும் வழிபட்டு முத்தி யெய்தினர். அவர் வழிவந்த உனக்கு இது அடாது. அப்பெருமானை வழிபடுவோர் அனுட்டிக்கும் 'சைவசமயமே சமயம்; சமயாதீதப் பழம்பொருளைக் கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப் பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டாம்; முத்தி தருந் தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாரும்' அரசே! எங்குமாய் எல்லாமாய் எல்லாம்வல்ல சிவபரஞ்சுடரின் தடத்தலக்கணங்களை மெய்யடியார் சரித்திர வாயிலாக உணர்த்தும் ஒரு சிறந்தநூல் இருக்கின்றது. அந்நூல் கூறும் மெய்யடியார்கள் சிவபெருமானை மெய்யன்புடன் வழிபட்டு உய்ந்து கடைத்தேறினர். அங்ஙனம் வழிபடின் அது உனக்கும் மற்றெவர்க்கும் 'இம்மையே தரும் சோறும் கூறையும்; (நீ இதிற் சிறிதும் சந்தேகமின்றிப் பூரண நம்பிக்கையுடன்) ஏத்தலாம்; (அங்ஙனஞ்செய்யின்) இடர்கெடலுமாம்; அம்மையே சிவலோகமாள்வதற்கு யாதும் ஐயுறவில்லையே'; இது சத்தியம்" என்றார். (வரும்).

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்புக்கொண்டாட்டம்.

இக்கல்லூரியின்வருடாந்தப்பரிசளிப்புக் கொண்டாட்டம் சென்ற வியாழக்கிழமை மாலை ஆறரை மணி தொடக்கம் ஏழரை மணிவரையில் நடைபெற்றது. அச்சமையத்தில் பிரதி தேசாதிபதியாகிய மிஸ்ரர் சிஸில் கிளெமென்றி யவர்களே சபைத் தலைவராகவிருந்தனர். அவருடைய பாரியாரே பரிசுகளைவழங்கினர். மேற்படி கல்லூரிக் கீழ்மண்டபமும் முன்றிலும் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தன. கல்லூரியின் முற்புறத்துள்ள தெருவீதியில் அழகிய பந்தரொன்று இடப்பட்டு வாழை கமுகு பூமாலை கொடியென்னுமிவைகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்தது. தேசாதிபதியவர்கள் பாரியாருடனும் மற்றும் பரிவாரங்களுடனும் வந்தசமயத்தில் மேற்படி கல்லூரி அதிகார சபைத் தலைவராகிய கௌரவ ஸேர் அம்பலவாணர் கனகசபையவர்களும், கல்லூரி மானேஜர் கௌரவ ஸ்ரீ துரைசுவாமி யவர்களும், கல்லூரித் தலைமை ஆசிரியர் ஸ்ரீ மு. சபாரத்தின சிங்கமவர்களும் அவர்களை வரவேற்றனர். தெருவீதி தொடக்கம் கல்லூரி வாயில்வரையில் "ஸ்கவுற்ஸ்" எனப்படும் ஊழிய மாணவரும் ஆசிரியர்களும் இருநிரையே மிக்க விநயத்துடன் நின்றனர். கல்லூரி மண்டபம் சைவ அபிமானிகளாலும் பெண்களாலும் மாணவராலும் மற்றுமுள்ளோராலும் நிறைந்திருந்தது. தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் இரு பிள்ளைகள் தமிழிற் பாடப்பெற்ற வந்தனோபசாரப் பாட்டைத் தேசாதிபதியின் முன்னிலையில்நின்று வாத்தியசகிதமாக இனிது பாடினர். பின்னர், தலைமை ஆசிரியர் சென்றவருடத்து அறிக்கைப்பத்திரத்தை வாசித்தனர். பரிசுகளெல்லாம் தேசாதிபதியின் பாரியாரால் ஒவ்வொன்றாக மாணவர்க்கு வழங்கப்பட்ட பின் தேசாதிபதியவர்கள் இந்துக் கல்லூரியைப்பற்றிச் சில கூறினர். இக்கல்லூரியே வட இலங்கையில் புராதனமானதெனவும், இங்கே ஆங்கிலக்கல்வியோடு தமிழ் சமஸ்கிருதம் என்னும் இருபாஷைகளும் நன்கு ஊட்டப்பட்டு வருகின்றன வென்பதும் வாசிக்கப்பட்ட அறிக்கைப்பத்திரத்தைக் கொண்டு அறியத்தக்கதாமெனவும், நெடுங் காலமாகக் கல்வியின் பொருட்டு உழைத்துவரும் இக்கல்லூரி விருத்திக்காகப் பொருளுதவி செய்தல் வேண்டும் எனவும் கூறி முடித்தனர். அதன் பின்னர் கௌரவ சேர் அம்பலவாணர் கனகசபையவர்கள் எழுந்து, தங்கள் வேண்டுகோட்கிணங்கி தேசாதிபதியவர்கள் பாரியாருடன் அச்சமையத்தில் சமுகஞ்செய்தமையையிட்டு நன்றிகூறி, சிறு ஆங்கில வித்தியாசாலையென ஆரம்பிக்கப்பட்ட இக்கல்லூரி அரசினருதவி கொண்டும் சைவாபிமானிகளின் உதவிகொண்டுமே இந்த உன்னத நிலையை அடையலாயிற்றெனவும், இப்பொழுதுள்ள விடுதிச்சாலை போதாமையினால், மிக்க விசாலமான விடுதிச்சாலையொன்று அதிகபணஞ் செலவிட்டு அமைக்கப்படல்வேண்டுமெனவும், குறித்த விடுதிச் சாலைக்கென ஒரு சுபதினத்தில் அஸ்திபாரம் போடப்பட்டிருக்கின்றதெனவும், அதனை விரைவில் கட்டி நிறைவேற்றும் பொருட்டுப் பொருள் சேர்ப்பதற்காகவே இக்கல்லூரிப் பிரதமாசிரியராகிய மிஸ்ரர் நெவின்ஸ் செல்வத்துரை யவர்களும், ஆசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ வியாகேசனவர்களும் மலாய் நாட்டிற்குச் சென்றிருக்கின்றனரெனவும், அக்கட்டடம் நிறைவேறும்போது தேசாதிபதியவர்களே சமுகந்தந்து அக்கட்டடப்பிரவேசஞ் செய்தல் வேண்டுமெனவும் பேசிமுடித்தனர். அதன்பின் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

## சமாசாரம்.

### எமது புதிய தேசாதிபதி.

எமது புதிய தேசாதிபதியாகிய சேர் ஹியூ கிளிவோட் அவர்கள் வருகிற அக்டோபர்மாசத்தில் இலங்கைக்கு வருவாரென அறியலானேம்.

### மிருகஹிம்ஸா நிவாரண சங்கம்.

சென்றவருடத்திலே இச்சங்கம் மிருகஹிம்ஸா ரேங்காரணமாக இலங்கையில்தொடர்ந்துள்ள வழக்குகளின் தொகை 1765. இவற்றுள் ஒருசில வழக்குகளை ஒழிந்த ஏனைய வழக்குகளிலெல்லாம் எதிரிகள் குற்றவாளியாகக் காணப்பட்டு அபராதம் விதிக்கப்பெற்றனர். சென்றவருடம் இச்சங்கத்தாரால் யாழ்ப்பாணத்திலே தொடரப்பட்ட வழக்குகளின் தொகை 451. அபராதமிடப்பட்டபணம் ரூபா 2568.

### இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம்

இச்சங்கத்தின் ஐந்தாம்வருடக்கூட்டம் இம் ஜூன்மீ 20ந்உ சனிக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி மண்டபத்திற் கூடும். அத்தருணம் இலங்கை வித்தியாசர்த்தாவர்கள் சமுகமளிப்பர். சுதேச பாஷாசிரியரின் வேதனவிஷயமாக வித்தியா பகுதியார் செய்துள்ள விசேட ஒழுங்குகளின்பொருட்டு ஆசிரியர்களால் வித்தியாதர்த்தருக்கு நன்றிகூறப்படுமென்றும், ஆசிரியர்களுக்கு வேண்டிய பல கருமங்களைப்பற்றி வித்தியாகர்த்தர் பேசுவாரென்றும் மேற் சங்கக் காரியதரிசி தெரிவிக்கின்றனர்.

### எமது தேசாதிபதி.

எமது பிரதிதேசாதிபதியும் பரிபாரும் சென்ற புதன்கிழமை காலை இங்குவந்துசேர்ந்தனர். அவர்கள் அன்று காலையில் சிறைச்சாலை, ரோகு, சென்ஜோன்ஸ்கல்லூரி, சென்பாற்றிக்ஸ் கல்லூரி என்னுமிவற்றைத் தரிசித்துக்கொண்டு கச்சேரிக்குச்சென்றனர்; அங்குப் பட்டினபரிபாலன சங்கத்தவரால் நல்வரவேற்கப்பெற்றனர்; அன்றுமாலை உடுவிற்பெண்பாடசாலை, இராமநாதன் கல்லூரி காங்கேயன் துறை பகுதித்துறை என்னுமிடங்களைத் தரிசித்தனர்; மறுதினமாகிய வியாழக்கிழமை யாழ்ப்பாணம் கல்லூரி ஊர்காவற்றுறை என்னும் இரு இடங்களையும் பார்வையிட்டனர்; அன்று பிற்பகல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்புக்கூட்டத்தில் அக்கிராசனம் வகித்தனர்.

### விஷபேதி.

இந்நோய் பொலநெருவைக்கணித்தாயுள்ள மாவில் என்னுமிடத்தில் வசிக்கும் இருபத்து மூன்றுபேரைப் பீடித்தது. பதினேழுபேர் மாண்டனர். திரிகோணமடுவென்னுமிடத்தில் நால்வர் இறந்தனர். இந்நோயினாற் பீடிக்கப்படுவோர் தத்தம் கிராமங்களைவிட்டு வெளிச்செல்வதினாலேயே அயற்கிராமங்களிலும் இந்த விஷபேதி பரம்புகிறதென வைத்தியப்பகுதியார் அபிப்பிராயப்படுகின்றனர். அதிகாரிகள் கிராமவாசிகளை வேறிடங்களுக்குச் செல்லாதபிரகாரம் தடுக்க முயலுகின்றனர்.

### பதிவுக்ந்தோர்த் தலைவரின் அறிக்கை

இலங்கைப் பதிவுகந்தோர்த்தலைவர் சென்ற வருடம் கொத்தாரிசமாருடைய வேலையைப் பற்றிப் பின்வருமாறு தெரிவிக்கின்றனர். சென்றவருடம் இலங்கையில் வேலைபார்த்த கொத்தாரிசமாரின் தொகை 933. அதற்கு முந்திய வருடத்திலும்பார்க்க நாற்பத்தொன்பதுபேர் அதிகம். கொத்தாரிசுமாரால் எழுதப்பட்ட உறுதிகளின் தொகை முந்தியவருடத்திலுள்ளதிலும் 9261 அதிகம். சராசரி ஒருவரால் எழுதப்பட்ட உறுதிகளின்தொகை இருநூற்றுமுப்பத்தேழாகும்.

### வெய்யிலின் உக்கிரம்

அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் வெய்யிலின் உக்கிரம் அதிகமாயிருக்கிறது. அங்குள்ள சனங்கள் வெய்யிற்கொடுமையினால் இராக்காலங்களில் தோட்டங்களிலும் மரநிழல்களிலும் வெளிகளிலும் தங்கியிருக்கின்றனர். அமெரிக்காவில் நூற்றைம்பதுபேரும் இங்கிலாந்திற் சிலரும் அதன் உக்கிரத்தைச் சகிக்கலாற்றாது இறந்தனராம்.

### விஷவாயுவினால் மூவர் மாண்டனர்.

சென்ற செவ்வாய்க்கிழமை கல்கத்தாவிலே ஒரு சணல்யந்திரசாலைக்குத் தண்ணீரெடுக்கும் கிணற்றைச் சுத்தம்செய்யும்பொருட்டு ஒருவன் உள்ளேஇறங்கினன். அதிகநேரமாயும் அவன் மேலே வாராமையினால்பின்னுமொருவன்உள்ளே இறங்கினன். அவனும் திரும்பிவாராமையினால் மூன்றுவதாகவும் ஒருவன் இறங்கினன். அவர்கள் மூவரும்நச்சுக்காற்றினால் மாண்டனர்.

### சீனாவிற் குழப்பம்.

சென்ற வியாழக்கிழமை அங்குள்ளார்க்கும் அந்நியநாட்டினருக்கு மிடையில் அதிககலகமுண்டாயது. கலகக்காரர் ஜப்பானியருடைய அநேககடைகளை அழித்தனர்; ஆங்கிலபடைவீரரின் ஆயுதசாலையைத் தாக்கினர். யந்திரத்துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்தது. எண்மர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். வேலையில்லாதவர்களுக்கு 100000 டலர் உதவுதற்கு அங்குள்ள அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. கலகத்தின் விசேடகாரணராயிருந்த பதினேழு மாணவர்கள் விசாரணை செய்யப்பட்டனர் கலகத்தை அடக்கும்பொருட்டு 1000 பதாதியபடைவீரர் அங்குச்செல்கின்றனர். இக்கலகம் எவ்விதமாக முற்றுமோ வென்பதிலேயே அயல்நாடுகளில் அதிகமாயிருக்கிறது.

---

### காரைநகர்ச் சைவமகாசபை.

இச்சபையின் பத்தாவது வருஷோத்ஸவம் நிகழும் குரோதன ஞு வைகாசிமீ 24உ (6—6—25) சனிக்கிழமையும் அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமையும் மேற் சபைச்சபாமண்டபத்திற் சிறப்பாக நடைபெற்றது.

முதல் தினம் பிற்பகல் ஆறுமணியளவில் கௌரவ சேர். பொ. இராமநாதன் அவர்கள் சபைத்தலைவராக வீற்றிருக்கத் தேவாரபாராயணத்துடன் வருஷோத்ஸவம் ஆரம்பமாயது. முதலாவதாய் இராமநாத வித்தியாலய சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ. ச. பரமேஸ்வர ஐயர் அவர்களால் சங்கீத பஜனை நடத்தப்பட்டது. பின்னர் சபைத்தலைவருக்கு வரவேற்புப்பத்திரம் ஸ்ரீ. ச. கதிரவேலு அவர்களால் வாசிக்கப்பட்டு உபகரிக்கப்பட்டது. சபையின் பத்தாவது வருஷ அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டபின் ஸ்ரீ. க. சிவபாதசுந்தரம்பிள்ளை B. A. (விக்டோறியாக் கல்லூரிப் பிரதம ஆசிரியர்) அவர்கள் "சைவ சமயக்கிரியைகள்" என்னும் விஷயமாக ஓர் சிறந்த பிரசங்கஞ் செய்தனர். ஸ்ரீ. மு. சபாரத்தினசிங்கம் B. A. அவர்களும், ஸ்ரீ. மு. சோமசுந்தரம (நிலபற்று மணியம்) அவர்களும் குறிப்புரை கூறியதின்மேல் அக்கிராசனர் அவர்கள் "முத்திநெறியறியாத—" என்னும் திருப்பதிகத்தைப் பீடிகையாகக்கொண்டு சைவசமயிகள் அனுஷ்டிக்கவேண்டிய முறைகளைக் குறித்துக் கேட்டவர்மனம் பரவசமடையத்தக்கதாச் சிறந்த குறிப்புரை கூறினர். எட்டரை மணியளவில் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவேறியது.

இரண்டாவது தினமாகிய ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் நாலுமணிதொடக்கம் ஐந்துமணிவரையும் மாணவர் சமாஜம் நடைபெற்றது. பின்னர் சபைத்தலைவர் ஸ்ரீ. பொ. வேலுப்பிள்ளை அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஆறுமணியளவில் தேவாரபாராயணத்துடன் வருஷோத்ஸவம் ஆரம்பமாயது. முதலாவதாய் நிருவாக சபையின் உத்தியோகஸ்தர்களும், அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இரண்டாவதாய் சபைமாணவர்கள் "தமிழ்க்கல்வி," "தத்துவஞானம்" என்னும் அரியவிஷயங்களில் வியாசங்கள் வாசித்தனர். மூன்றாவதாய் ஸ்ரீ. S. நடேசபிள்ளை B. A B. L அவர்கள் "குருகுலவித்தியாலயம்" என்னும் விஷயத்தில் ஓர் சிறந்தபிரசங்கஞ்செய்தனர். கடைசியாய் ஸ்ரீ. ஆ. கதிரவேலு J. P, U P. M அவர்கள் குருகுலவித்தியாலயத்தின மகத்துவங்களையும், அதனால் நாமடையக்கூடிய நன்மைகளையும் எடுத்துக்காட்டி அதை அதிசீக்கிரத்தில் நிறைவேற்றவேண்டுமெனபதாகக் குறிப்புரைகூறினர். சமயபாடப்பரீட்சையிற் சித்தியெய்திய மாணவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்ட பின்னர் ஒன்பது மணியளவில் தேவாரபாராயணத்துடன் பத்தாவது வருஷோத்ஸவம் நிறைவேறியது. கடித.

---

### மதுரைத் தமிழ்ச் சங்கம்.

1925ம்ஆ ஏப்பிரல்மீ 6, 7, 8 ந் திகதிகளில் நடந்த தனித்தமிழ்ப் பரீட்சைத் தேர்ச்சிக் குறிப்பு:—

பண்டிதபரீட்சை.

இரண்டாம்வகுப்பு —ஸ்ரீ வ. சு. இராஜ ஐயனர் பரமேஸ்வரக்கல்லூரி, யாழ்ப்பாணம்.

பாலபண்டிதர் பரீட்சை.

முதலாம் வகுப்பு —ஸ்ரீ கருணாலயபாண்டியன், தேவப்புத்தூர், கோவிந்தசாமி, மதுரை.

இரண்டாம்வகுப்பு —ஸ்ரீ ஞா. சிவப்பிரகாச தேசிகர், காரைவாய், யாழ்ப்பாணம்,

---

### யாழ்ப்பாணம் ஆரியதிராவிடபாஷாபிவிருத்திச் சங்கம்.

1925-ம் ஆ ஏப்பிரல்மீ நடைபெற்ற மேற் சங்கப்பரீட்சைகளிற் சித்தியடைந்தவர்களின் நாமம் முதலியன:

தமிழ்ப்பண்டித வகுப்பு

முதற்பிரிவு.

சுன்னாகம் பிராசீனபாடசாலை, ஸ்ரீ. T. சுப்பிரமணிய ஐயர்.
,, ஸ்ரீ. T. கைலாசநாததேசிகர்.

மூன்றும் பிரிவு.

சிவியாதெரு ஸ்ரீ. M. வேதநாயகம்.

தமிழ்ப்பாலபண்டித வகுப்பு

இரண்டாம் பிரிவு.

மட்டக்களப்பு, அரசடி ஸ்ரீ. A. சபாபதி.
சாவகச்சேரி, சங்கத்தானை, உபாத்தியாயர் ஸ்ரீ. K. இராமப்பிள்ளை.
,, அனுவில் ,, ஸ்ரீ. சுப்பையா.
புலோலி கிழக்கு ஸ்ரீ. V சுப்பிரமணியம்.
காரைவாய் ஸ்ரீ. S. கந்தவனம்

மூன்றும் பிரிவு.

சுன்னாகம் பிராசீனபாடசாலை: ஸ்ரீ. V. சதாநந்ததேசிகர்
கோப்பாய் ஆசிரியர் கல்லூரி: ஸ்ரீ. K. தியாகராசா.
யாழ்ப்பாணம், பிறக்டர் ஸ்ரீ. K ஐயாத்துரை.

தமிழ்ப்பிரவேசபண்டித வகுப்பு

முதற்பிரிவு.

நீர்வேலிச் சைவப்பிரகாச வித்தியாசாலை ஸ்ரீ. P வேலுப்பிள்ளை.

இரண்டாம் பிரிவு.

இராமநாதனகல்லூரி ஸ்ரீமதி. ஆ. அமிர்தவல்லியம்மாள்.
உடுவில் ஸ்ரீ. S சரவணபவன்.
வண்ணார்பண்ணை ஸ்ரீமதி. K இரத்தினம்மாள்.
கோப்பாய் அரசினர்வித்தியாசாலை ஸ்ரீ. N. கந்தசாமி.
இராமநாதன்கல்லூரி ஸ்ரீமதி. சு. அழகமுத்து.
சாவகச்சேரிச் சைவாங்கிலவித்தியாசாலை ஸ்ரீ. V. தில்லைநடேசபிள்ளை.

மூன்றும்பிரிவு.

இராமநாதன்கல்லூரி ஸ்ரீமதி. க. தில்லைவனம்
கந்தரோடை ஆங்கிலவித்தியாசாலை ஸ்ரீ. E. திருநாவுக்கரசு.
தெல்லிப்பழை, சீனன்கலட்டி வித்தியாசாலை ஸ்ரீ. K. சின்னத்தம்பி.

சமஸ்கிருதபாலபண்டித வகுப்பு

முதற்பிரிவு

சுன்னாகம் பிராசீனபாடசாலை: ஸ்ரீ. V. சதாநந்ததேசிகர்.

இரண்டாம் பிரிவு.

சுன்னாகம் பிராசீனபாடசாலை ஸ்ரீ. இரத்தினசபாபதி ஐயர்.

சமஸ்கிருதபிரவேசபண்டித வகுப்பு

மூன்றும் பிரிவு.

சுன்னாகம்பிராசீனபாடசாலை. ஸ்ரீ T செல்லையா.

### சித்தர்கள்.

(முற்றொடர்.)

நன்மக்களைப் பெறுதற்கு முதலாவது நல்லுடல்தேவை. அவ்வமைப்புக்குச் சித்தர்கள் தங்கள் நூல்களில் பல வழிகள் காட்டியுள்ளார்கள். அவர்கள் நூல்களில் மணிமந்திர மருந்து முறைகள் யோகமுறைகள் முதலிய பலபடவிரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. நல் லுடலமைப்புக்காதல் சித்தர்கள் நூல்களைக் கற்கலாமன்றோ? உடலை யோம்புமாறு சித்தர்கள் அறைகூவி அறிவுறுத்தியிருப்பதுபோல, வேறெவரும் அறிவுறுத்தவில்லை. வளமிலா உடல் பிணத்தையொத்தது. வளமுற்றவுடல்கொண்டு உலகிற் செயற்கருஞ்செயல்கள் செய்யலாம். சித்தர்கள் முறைகளைக் கையாண்டால் உடலை வச்சிரம் போலாக்கிக்கொள்ளலாம்.

நல்லுடலுக்கு அடிகுறி, மூலம் இதயம் மூளை இம்மூன்றும் ஊன்றியிருப்பது. மூலத்துக்கு ஊறு ஏகழின், ஏனையவிரண்டுக்கும்ஊறு இயல்பாகவே ஏகழும். மூலத்தில் ஊறு ஏகழாத வாறு காக்குமுறையுணரப் பொருள்செலவு செய்து ஜெர்மனிக்கு ஓடவேண்டுவதில்லை மூல நோய்க்குக் காரணம் சித்தர் தலைவர் திருமூலனார்,

"காயத்தில் மூலம் கண்ட விதங்கேளு
பாயொத்த திபனம் பரிந்தே யடக்கினும்
மாலைய மயக்க மலத்தை யடக்கினும்
ஓயுற்ற குண்டலிக் குட்புகும் வாயுவே.

வாயு புகுந்து மலந்தோ டபானத்தைத்
தேயுவைக் கூட்டித் திரட்டிக் கருக்கிடும்
தேயும் மலம்வரிற் சுருக்கிமுன் னேநின்று
ஆயு மூளைபோ லபான விருக்குமே.

இறுக்குஞ் சிலமூல மெழுமண் டலம்போல
மறுக்கா ணக்கொண்டு வருகுஞ் சிலமூலம்
உறுக்கிய வாயுவா லுதிரமும் தான்கூடித்
தறுக்கி விழுக்காட்டும் தான்ரத்த மூலமே.

மூல மெழுந்திடில் முன்னே பசிபோகும்
மூல மெழுந்திடில் முனைவிந்து நாசமாம்
மூல மெழுந்திடில் முழங்கு பிரைச்சல்தான்
மூல மெழுந்திடில் முகியாக் கழிச்சலே."

என்று எளிய நடையில் விளக்கியிருத்தல் காண்க. இக்காலில் பசியோடு தொழில் புரிபவர் எத்தனைபேர்? மலமடக்கி வினையாற்றுபவர் எத்தனைபேர்? அந்தோ கொடுமை! விலங்குகளும் பறவைகளும் மலசலத்தைக் காலத்துக்குக் காலங்கழிக்கு முரிமை பெற்றிருக்கின்றன. ஏழைகளோ! தொழிலாளிகளோ!— உள்ளம் உருகுகிறது. உலகம் நோய்க்கு இரையாகிறது. தற்கால நாகரிகம் மனிதனைப் பல வழியிலும் இடர்ப்படுத்துகிறது. இக்காலில் சித்த நூலாராய்ச்சி மிக இன்றியமையாதது.

சித்த நூல்களை ஆடவர் மகளிர் என்னும் இருபாலாரும் பயில்வது நலம். இருபாலார் உள்ளமும் சித்தர் நூலில், சித்தர் வாலாற்றில், அவர் திருவடியில் மனம் பதிந்து கிடத்தல்வேண்டும். அம்மனமுடையார் வயிற்றில் பிறக்கும் பிள்ளைகள் சித்தர்களாவார்கள் கீழான எண்ணங்களை எண்ணும் உள்ளமுடையார் வயிற்றில் பன்றிகள்தான் பிறக்கும்.

இவ்வுலகில்பெறற்கரிய மக்கட்பிறவிபெற்று, அதனை நோய்க்கு இரையாக்கிப் பெறவேண்டிய பேற்றை யிழப்பதினும் அறியாமை வேறென்றுண்டோ? இவ்வறியாமைக்குக்காரணம் மனிதன் தன்பாலுள்ள ஆன்மசக்தியை யுணராது வாழ்வதே. பொய்ம்மை ஆன்மசக்தியை ஒடுக்கும் பெரும்பாறை என்பது கவனிக்கற்பாற்று.

பொய்யே மனிதனை எல்லாவழியிலும் கெடுக்கிறது. பொய்யர் பெருகப் பெருக உலகம் பொய்மயமாகிவிடும். இன்னுஞ்சிலவிடங்களில் மெய்யாளருண்மையால் உலகில் ஒருவாறு அறநெறி நிலவிவருகிறது. உலகிடைப்பொய்யைப் பெருக்கத் தேர்தல்கள் முளைத்திருக்கின்றன. தேர்தல் காலங்களில் வெற்றி குறிக்கொண்டு மனிதன் எவ்வளவு பொய் கூறுகிறான்? எவ்வளவு தற்பெருமை பேசுகிறான்? எவ்வெவ் வழியில் பிறரைப் புறங்கூறுகிறான்? பொய்மையையும் தற்பெருமையையும் புறங்கூறலையும் புற்றீசல்போலப் படைக்குந்தேர்தல் முதலிய தற்கால நாகரிக முறைகள் பழமைவாய்ந்த நமது நாட்டிடைப்புகுந்து இன்னல் விளைக்கின்றன. அறவோர் மறவோராகிறார்; அந்தணர் செந்தண்மையிழக்கிறார். 'ராமராஜ்ய' நினைவே அகல்கிறது. ஆன்ம நேயக்கல்வி முறைகள், பாட்டமுகு நுட்பம், காதலின்பம் முதலிய இன்பத்துறைகள் அழிகின்றன. பிறர் அழிவு நினைவும், போர் நினைவும், பிறரை ஏமாற்றுமுறையும் வளர்கின்றன. இவ்வுலகில் மனிதன் மீண்டும் பழைய நிலை எய்த முயலானாயின் விலங்காய் வருந்துவன். பொய்யும் பூசலும் பொறாமையும் மலிந்து நெருக்குங்காலில் மனிதன் நிலைமைகளை வெறுக்க முயலுவன் கடப்பாடுடையனாகிறான். அவ்வேலையில் ஆங்காங்குள்ள அறிஞர் சித்தர் கல்விமுறைகளை உயிர்ப்பிக்க முயலல் வேண்டும்.

பொதுவாக உலகில் சிறப்பாக இந்தியாவில் வகுப்புப்பூசல், சாதிச்சண்டை, சமயப்போர் நிகழ்ந்துவருவது எவரும்அறிந்ததொன்று. சித்தர் கல்வி இப்போர்களைப் போக்கவல்லது. மனிதன் தன்பாலுள்ள ஆன்மசக்தியைக் காணவும் பெறவும் முயலும்போது, சாதிமதச்சண்டையிற் கருத்தைச் செலுத்தான். ஆன்மசக்தி நினைவூட்டுங்கல்வி இப்பொழுது வேண்டற்பாலது.

நமது தமிழ் நாட்டில் வடமொழி தென்மொழிச்சண்டை ஒருபால் வளர்ந்துவருகிறது. சித்தர் கல்வி அச்சண்டையையும் ஒழிக்கும். சித்தர்கள் இருமொழியையுங் கொண்டவர்கள். நாட்டுக்கு நலம் பலவழியிலும் நல்கவல்ல சித்தர் கல்வியைப் பரப்ப ஒரியக்கந் தோன்றுதல்வேண்டும். அவ்வியக்கத்திலீடுபட்டுஉழைத்தற்க சமரச நோக்குடைய சாந்தமூர்த்திகளும் வேண்டற்பாலர்.

பாரதபுதல்வர்களே! உங்கள் முன்னோர்கள் யோகிகளாய் முனிவர்களாய், சித்தர்களாயிருந்தார்கள். நீங்கள் எப்படியிருக்கிறீர்கள்? உங்கள் கல்வியெங்கே? உங்கள் ஆன்மஞானமெங்கே? உங்கள் வைத்தியமுறைகளெங்கே? உங்கள் செல்வங்களெல்லாம் போயின; வறியர்களாகத் தவிக்கிறீர்கள். உங்கள் சித்தர்காலத்தை நினையுங்கள். அக்காலம் மீண்டும் வருமா? வரும் என்று உள்ளுவ எல்லாம் உயர்வுள்ளி எழுங்கள். சித்தர்களைப் போற்றிப்போற்றிச் சித்தர்களைப்பெற முயலுங்கள்.

"பொய்திகழு முலகநடை யென்சொல்கேனென்சொல்கேன்—பொழுதுபோக் கேதெனிலோ, பொய்யுடலை நித்தம் புசிப்புக் கலைந்திடல்—புசித்தபின் கண்ணுறங்கல், கைதவமலாமலிது செய்தவம தல்லவே—கண்கெட்ட பேர்க்கும் வெளியாய்க், கண்டதிது விண்டிதைக் கண்டித்து நிற்றலெக்—காலமோவதையறிகிலேன், மைதிகழு முகிலினங் குடைநிழற் றிடவட்ட—வரையினொடு செம்பொன்மேரு, மால்வரையின் முதுகூடும் யோகதண் டக்கோல்—வரைந்துசய விருதுகாட்டி, மெய்திகழு மண்டலங்க யோகபூ மிக்குள்வளர்—வேந்தரே குணசாந்தரே, வேதாந்த சித்தாந்த சமரசநன்னிலைபெற்ற—வித்தகச் சித்தர்கணமே."

—தாயுமானர். —"நவசக்தி."


### விளம்பரம்.

யாழ்ப்பாணம் ரேஞ்சுக்கு அருகாமையாய் இருக்கும் விறகுசாலையில் கீழே குறிக்கப்பட்ட மரங்கள் 1925-ம்ஆ ஆடிமீ 3உ வெள்ளிக்கிழமை முற்பகல் ஒன்பதரை (9-30) மணிக்கு பிரசித்த ஏலத்தில் யாழ்ப்பாணம் காட்டேசண்டுத்துரையவர்களால் விற்கப்படும்.

50 பாலைமரங்கள்.
50 முதிரைமரங்கள்.

R. M. White,
Actg. வனபரிபாலனர்,

கண்டி
காட்டுக்கந்தோர்
ஆனிமீ 8உ 1925. (G. 518).

### விளம்பரம்.

காங்கேசன்துறை ரேஞ்சிலிருக்கும் மரக்காலையில், கீழே குறிக்கப்பட்ட மரங்கள் 1925-ம் ஆண்டு ஆடி மாதம் 1-ந் திகதி புதன்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு பிரசித்த ஏலத்தில் காட்டேசண்டுத்துரை யவர்களால் விற்கப்படும்.

80 முதிரைமரங்கள்
11 பெரிய சிலிப்பர்க்கட்டை
16 சின்ன சிலிப்பர்க்கட்டை
83 தர்திக்கம்பிமரங்கள்

R. M. White,
Actg. வனபரிபாலனர்,

கண்டி
காட்டுக்கந்தோர்
ஆனிமீ 8உ 1925. (G. 516).

### தங்க மலாம் பூசிய ரிஸ்லெட் கெடியாரம்.



இந்த கெடியாரம் பார்வைக்கு பொன் கெடியாரம் போலவேதோற்றும். வெகு அழகாயும் ஆச்சரியமாயும் இருக்கும். சரியான டைம் காட்டக்கூடியது. வெகு காலம் நன்றாய் போகக்கூடியது.

பொன் கில்ட் ரிஸ்லெட் கெடியாரமும் பொன் கில்ட் ஸ்பிரிங் பட்டையுடன் 6-8-0.

ஸ்ட்ரேட் செடல்மெண்டுக்கும் F. M. S. மலேயாஸ்ட்ரேட்டும்முன் பணமில்லாமல் C. O. D. மூலியமாக அனுப்ப முடியாது.

விலாசம்:—கனக அண்டு கம்பெனி,
(H. 35) பார்கீடவுன் போஸ்ட், மதராஸ்.

### தேக்கமரம்.

புதிதாக வருவிக்கப்பெற்ற திறமான தேக்க மரங்கள். நீளம் 6 அடிதொடக்கம் 30 அடி வரையிலுள்ளன. கனம் 10 அங்குலம் தொடக்கம் 20 அங்குலம்வரையி லுள்ளன. நீண்ட மரங்கள் குறைவாயிருப்பதினால், எம்மிடம் வழக்கமாயெடுப்பவர்கள் தங்கள் ஆடர்களை எற்கனவே செய்துகொள்ளவேண்டியது.

S. வீரகத்திப்பிள்ளை,
தொண்டமானாறு,

தந்திவிலாசம்
ஏ பி. வல்லுவெட்டித்துறை,
(H. 37.)

## அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

ச. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

## ஹிஸ்டிரியா என்னும் மூர்ச்சைவியாதி நிவர்த்தியாயிற்று.

என்று திருவாலங்காவல் சீதாராமய்யரவர்கள் பின்வருமாறு சென்னைக் கேஸரி குடீரம் கம்பனியாருக்கு எழுதினார்.

4 வருஷகாலமாய் அட்டக்கடி (பலவீனத்தை காலத்தில் வரும் ஹிஸ்டிரியா) மூர்ச்சைவியாதியால் வெகு ஆபத்தாய்ப்படுத்திருந்த என் பாரியாளுக்கு உம்மிடமிருந்து தருவித்த "லோத்ரா"வுப யோகத்தால் சம்பூரணகுண முண்டாயிற்று.

"கேஸரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர்,
மதராஸ்.

(Y. 35. A)

படிக்கப் படிக்க இனிக்கும்!
நினைக்க நினைக்க மணக்கும்!!

## சரீர மர்ம சாஸ்திரம்

தமிழ்ப்பாஷையில் இவ்வளவு பூரணமான இரகசிய சாஸ்திரம் இதுவரையில் எவராலும் பகிரங்கமாய் வெளியிடப்படவில்லை. இதில் ஸ்திரீ புருஷலக்ஷணங்களும், அவர்களது சரீர அமைப்பும், அவர்களின் நேர்மையான உபயோகங்களும், ரதிமன்மத சிருங்கார ரஹசியங்களும், ஆண் பெண் சிசு உற்பத்தி விவரங்களும், ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகளால் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனிமேல் விவாகம் செய்துகொள்ளும் சிறுவர் சிறுமிகளுக்கும் இன்றியமையாத நூல். 64 படங்களுடன் சுமார் 200 பக்கங்களுடைய 4-ம் பதிப்பு புத்தகம் விலை ரூ 1. தபால் செலவு அணா 0—7—0

மாணிக்க விலாசம் பிரஸ்,
12, அருணாசல முதலி வீதி, சென்னை.

(Q. 62.)

"ஸ்ரான்டேர்ட்"

## கொழுக்கியோடுகள்:

## (Standard Tiles)

பின்வரும் நியாயங்கள் பற்றியே நாம் இந்த ஸ்ரான்டேர்ட் ஓடுகளைத் தருவித்து விற்கின்றேம்:—

முதலாவது, இந்த ஓடுகள் மிகப்பாரக்குறைந்தனவும்.

இரண்டாவது, இவைகள் நெடுங்காலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கன.

மூன்றாவது, இந்த வடஇலங்கையின் தேசசுவாத்தியத்திற்கு இயைந்த ஓடுகள் இவைகளேயாம். இந்த ஓடுகள் உஷ்ணகாலங்களிற் குளிர்ச்சியையும் சீதளகாலங்களில் உஷ்ணத்தையும் தரும் தன்மையன.

இந்த ஓடுகளைச் சென்ற சில வருடகாலமாக நாம் தருவித்து விற்றுவருகின்றோம். இந்தகாலவருடகாலத்தில் நாங்கள் ஆச்சரியப்படத்தக்க விதமாக இவை செலவழிகின்றன. மற்றும் ஓடுகளிலும்பார்க்க இவை சிறந்தனென்பதற்கு இந்த ஒரு நியாயமுமே போதிய சான்றாகும்.

S. வீரசந்திப்பிள்ளை,
சோல் ஏஜண்டு,
யாழ்ப்பாணம்.

(H. 34.)

புதிய தினுசுகள் சகாய விலைகள்

நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனாரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னாடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
COLOMBO.

(Y. 39).

## ஆப்ரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய்விட்டது.

கேஸரியின் விலையுயர்ந்த ஔஷதங்களின் குணத்தை மிகவும் மெச்சினேன் 'லோத்ரா'வைப்பற்றி என் அனுபவத்தைத்தெரிவிப்பதுவுமன்றி, அதற்குச் சமமான ஔஷதம் பூலோகத்தில் வேறொன்றுமில்லையெனத் திண்ணமாய்க் கூறுவேன். என்மனைவிக்கு வயிற்றில் இடதுபாகத்தில் ஒருவிதமான வலி இருந்து வந்தது மேஜூட்டு (இங்கிலீஷ்) வைத்தியம் எல்லாம் பிரயத்தனப்பட்டுக் குணமடையவில்லை. பின் ராஜமந்திரி ஆஸ்பத்திரிக்கு அழைத்துப்போனதில் உடனே கர்ப்பபையில சாஸ்திர சிகிச்சைசெய்யவேண்டு மென்றார்கள். இது என் மனைவிக்குச் சம்மதமில்லாததால் பெருங்கஷ்டத்துடன் ஊர் வந்துசேரும் தருணத்தில் வரப்பிரசாதிபோல் "லோத்ரா" தியாபகத்திற்கு வந்ததால் சென்னைக்கு ஆபரேஷனுக்கு வருமுன் இதை உபயோகித்துப் பார்க்க எண்ணங் கொண்டவளாய் தந்தி மூலமாய் ஆடர் கொடுத்து ஔஷதத்தை தருவித்துக்கொண்டு முதல்வேளை மருந்து கொடுத்த மாத்திரத்திலேயே குணம் காண ஆரம்பித்தது இரண்டாம் வேளை மருந்து கொடுத்தவுடன் 8-மணிநேரம் நல்ல நித்திரைசெய்தாள். மறுபடி மூன்றாம்வேளை மருந்து மறுநாள் கொடுத்த மாத்திரத்தில் வலியெல்லாம நின்றுவிட்டது. நாளுக்கு நாள் சுகமடைந்து வந்தாள். சத்தியமாய் "லோத்திரா" வினால் ஆபரேஷனில்தான் நிவர்த்தியாக வேணுமென்று இங்கிலீஷ் டாக்டர்கள் சொன்னவியாதி ஆபரேஷன் இல்லாமலே சுலபமாய் நிவர்த்தியாய் விட்டது என்று காக்கினாட, கோதாவரி டிஸ்டிரிக்டு போர்ட் இஞ்சினியர் ஆபீஸ், மகா-ா-ா-ஸ்ரீ பி. சுப்பராயுடு அவர்கள் எழுதுகிறார்.

இந்த ஔஷதத்தைப் பற்றிய புத்தகத்திற்கு உடனே எழுதுங்கள்.

"கேசரி குடீரம்"
ஆயுர்வேத ஔஷதசாலை,
எழும்பூர், மதராஸ்.

(Y. 35. B)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893 ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டத்தின்படி லைசென்சுபெற்று அடைவுபிடிக்கும் வண்கிழக்கு பெ. அ. சி. மு. அரு. அருணசலஞ் செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924-ம் ஆ. ஜெனவரி மீ

| கம். | டை | ரு. | ஊரும் பேரும் | நகையின் விபரம் |
|---|---|---|---|---|
| 1052 | 12 | 15 | கோப்பாய் கந்தையா அப்பையா | பொன் கல்தோடு 2 |
| 1055 | 12 | 50 | ஆனைக்கோட்டை குருசு வரப்பிரகாசம் | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1078 | 19 | 20 | வயாவிளான் சின்னையா தம்பு | பொன் கல் மோதிரம் 1 குருசு 1 |
| | | | பிபர்வரி மீ | |
| 1136 | 5 | 150 | வட்டுக்கோட்டை சின்னட்டியார் வெற்றிவேலு | பொன் பீலிக்காப்பு 2 கம்பிப் பூரானட்டியல் 1 |
| 1164 | 13 | 110 | ஆவரங்கால் சபாபதி இளையதம்பி | பொன் பட்டணக்காப்பு 4 |
| 1186 | 19 | 120 | சோனகதெரு அசனுமரைக்காயர் அசனுலெவ்வை | பொன் அல்க்குத்து 35 சவடி கொடி 1 |
| 1207 | 24 | 40 | ஊர்காவற்றுறை இராசலிங்கம் வீரவாகு | பொன் கைச்சங்கிலி 1 |
| 1216 | 28 | 40 | வண் மேற்கு அப்பாக்குட்டி முருகேசு | பொன் குண்டுவைத்த அரைப்பவுண் 3 மோதிரம் 1 |
| | | | மார்ச்சு மீ | |
| 1238 | 11 | 50 | சோனகதெரு அசனுமரைக்காயர் முகம்மதுமீறான்கண்டு | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1241 | 13 | 104 | நாவிபடி வயித்திலிங்கம் சின்னன் | பொன் கல்தோடு 4 |
| 1254 | 14 | 20 | மண்டைதீவு நாகநாதர் விஷ்ணுமூர்த்தி | பொன் பிள்ளைக்காப்பு2 குவளைக்கடுக்கன்2 |
| 1291 | 24 | 45 | கோப்பாய் வெற்றிவேலு சரவணமுத்து | பொன் பட்டணக்காப்பு 2 |
| 1315 | 29 | 12 | தாவடி கந்தர் செல்லப்பா | பொன் பின்முகப்பு 1 |
| | | | ஏப்பிரல் மீ | |
| 1374 | 9 | 7 | பறங்கித்தெரு விஷுசித்தம்பி மைம்பெண் நாகமுத்து | பொன் சிமிக்கிவாளி 2 கொண்டைப்பூ 1 |
| 1395 | 12 | 65 | கலட்டி தம்பர் சின்னத்தம்பி | பொன் கல்பதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1400 | 12 | 50 | கந்தர்மடம் இளையதம்பி விஷுசித்தம்பி | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| 1416 | 17 | 7 | பறங்கித்தெரு செல்லப்பா சீனிவாசகம் | பொன் உருண்டமோதிரம் 1 |
| 1442 | 22 | 200 | பெருமாள்கோவிலடி S. P. ஆவுடையப்பபிள்ளை | பொன் கல்மோதிரம் 5 |
| 1445 | 22 | 26 | தாவடி கதிரவேலு முத்து | பொன் கல்தோடு 2 வெள்ளிக் காற்சங்கிலி 2 |
| 1459 | 25 | 60 | புத்தூர் கயிலாயர் சின்னத்தம்பி | பொன் தாலிக்கொடி 1 சரட்டட்டியல் 1 |
| 1483 | 29 | 5 | கோப்பாய் சந்தியாகு ஆசீர்வாதம் | பொன் கொண்டப்பூ 1 |
| | | | மேமீ. | |
| 1494 | 2 | 70 | தட்டாதெரு அப்பலவாணர் ஆறுமுகப்பத்தர் | பொன் ருகடி 1 வளதாளம்பூ 1 மயிர்மாட்டல் 2 திருகண்டமாலை1 வெள்ளி பாதசரம் 2 |
| 1495 | 3 | 14 | சோனகதெரு வரிசைமுகம்மது முகைதீன்கண்டு | பொன் அல்க்குத்து 10 |
| 1502 | 5 | 15 | வண்மேற்கு இராசலிங்கம் விசயரத்தினம் | பொன் அச்சரக்கூடு 1 |
| 1517 | 12 | 75 | வண்மேற்கு வீரகத்தி தம்பு | பொன் கொலுசுக்காப்பு 2 |
| 1519 | 12 | 63 | நீர்வேலி வைரவநாதர் ஆறுமுகம் | பொன் பட்டணம் காப்பு 2 |
| 1549 | 21 | 10 | வண்மேற்கு தம்பையா கனகரத்தினம் | பொன் கொண்டப்பூ 1 தாளம்பூ 1 |
| 1559 | 24 | 100 | கோப்பாய் பிலிப்பு சந்தியாகு | பொன் பட்டணம் காப்பு 2 கிள்ளட்டியல் 1 |
| | | | ஜூன் மீ. | |
| 1586 | 1 | 50 | வண்கிழக்கு சின்னத்தம்பி நாகமுத்து | பொன் பட்டணம் காப்பு 2 |
| 1587 | 1 | 30 | வண்கிழக்கு சின்னத்தம்பி நாகமுத்து | பொன் அரைஞாண்கொடி 1 |
| 1588 | 1 | 140 | ,, ,, ,, | பொன் பூக்காப்பு 2 |
| 1597 | 5 | 40 | மாதகல் சின்னத்தம்பி சரவணமுத்து | பொன் தாலிக்கொடி 1 |
| 1599 | 5 | 70 | கந்தர்மடம் பெரியதம்பி கந்தையா | பொன் கம்பிப்பூரானட்டியல் 1 தாலிக்கொடி1 |
| 1603 | 6 | 60 | இருபாலை வேலு தம்பையா | பொன் பட்டணம் காப்பு 2 |

விற்பனவு:—1925-ம் ஆண்டு ஆனி மாதம் 9-ந் திகதி (22-6-25) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறசீக்கலாக மீருதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 658.)

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கச்சட்டத்தின் சட்டத்தின்படி லைசென்சு பெற்று அடைவு பிடிக்கும் வண்கிழக்கு ரா. மு. த. சொக்கலிங்கம்செட்டியாரிடம் அடைவுவைக்கப்பட்டு இப்போது தவணைதப்பி ஷை சட்டத்தின் 12-ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்.

1924 ஆ. ஏப்பிரல் மீ.

| கம். | உ | ரூபா | ஊரும் பெயரும் | நகைகளின் விபரம். |
|---|---|---|---|---|
| 350 | 27 | 35 | கண்டிக்குளி கதிரவேலு செல்லத்துரை | பொன் தாலி குண்டுகளுடன் கொடி 1 |
| 354 | 28 | 140 | கந்தர்மடம் நாகமுத்து கந்தையா | பொன் பட்டணம் காப்பு சோடி 1 டிம்பிபதக்கத்துடன் கம்பிப்பூரானட்டியல் 1 |
| | | | மேமீ. | |
| 395 | 8 | 50 | கோண்டாவில் கந்தர் செல்லத்துரை | பொன் தாலிக்கொடி 1 |
| 435 | 12 | 250 | கொக்குவில் கார்த்திகேசு அப்பலவாணர் | பொன் தாயித்துடன் இரண்டுபட்டுக் குண்டுச்சங்கிலி 1 சங்கிலி 1 |
| 442 | 14 | 95 | நல்லூர் ஆறுமுகம் சின்னத்துரை | பொன் சுரை திருகில்லாத பூக்காப்பு சோடி 1 |
| 452 | 16 | 260 | சோனகதெரு முகம்மதுஹுசின் சாகுலகமீது | பொன் 5 பட்டுமணிக்கோர்வை 1 இரண்டு பட்டுமணிக் கோர்வை 1 |
| 455 | 17 | 45 | ஷை முகம்மது அப்துல்காதர் தமயிக்கண்டு | பொன் பழுதும் முறிந்த அலக்கத் 2 கூட அலக்கத் 267 |
| 462 | 20 | 25 | சங்கானை சின்னப்பொடி பொன்னையா | பொன் முகப்பில்லாத தாலிக்குண்டுகளுடன் கொடி 1 |
| 480 | 22 | 85 | கந்தர்மடம் நாகநாதர் பெரியதம்பி | பொன்சுரை திருகில்லாத டிம்பி பதக்கத்துடன் செட்டிப் பூரானட்டியல் 1 |
| 484 | 23 | 65 | கந்தர்மடம் நல்லதம்பி வைத்திலிங்கம் | பொன் பட்டணக்காப்பு சோடி 1 |
| 512 | 28 | 160 | சோனகதெரு செயினுமுகம்மது முகம்மது அப்துல்காதர் | பொன் சவுடி 1 |
| 515 | | 20 | வண்கிழக்கு சிற்றம்பலம் கந்தையா | பொன் சவித்தோர் 1 |
| | | | ஜூன் மீ. | |
| 542 | 5 | 30 | வண்மேற்கு அப்பாக்குட்டி மைம்பெண் பொன்னு | பொன் முறுக்குக்காப்பு சோ. 1 |
| 573 | 14 | 35 | மயிலிட்டி நா. வெங்கடாசலம் தில்லையம்பலம் | பொன் கம்பிப் பூரானட்டியல் 1 |

விற்பனவு:—1925-ம் ஆண்டு ஆனி மாதம் 7-ம் திகதி (20-6-25) சனிக்கிழமை காலை 10 மணியளவில் எடுபட்டநகை பிறகீக்கலாக மீருதி ஷை கடையில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையர்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 659.)

இனும்! விலை ஜாப்தா. இனும்!!

## பிரசித்திபெற்ற மைசூர் ஊதுவத்திகள்.

| | | | | |
|---|---|---|---|---|
| தர்பார்வத்தி | சேர்1க்கு ரூ.10 | முதல் | ரூ.24 | வரை. |
| அம்பர்வத்தி | ,, 3 | ,, | 18 | ,, |
| கஸ்தூரிவத்தி | ,, 4 | ,, | 12 | ,, |
| பால்வத்தி | ,, 8 | ,, | 16 | ,, |
| ஜவ்வாதுவத்தி | ,, 4 | ,, | 10 | ,, |
| புனுகுவத்தி | ,, 3 | ,, | 6 | ,, |
| பன்னீர்வத்தி | ,, 1 | ,, | 4 | ,, |
| மத்தாப்புவத்தி | ,, 1 | ,, | 3 | ,, |

## மைசூர் வாசனை வில்லைகள்.

கஸ்தூரிவில்லை, கேசரிவில்லை, ஜவ்வாது வில்லை, புனுகுவில்லை, புதுக்கோட்டைவில்லை, பச்சைவில்லை. கிரயம் வில்லை 1க்கு 0-8-0 முதல் 1-0-0, 1-8-0, 2-0-0, 2-8-0, 3-0-0, 4-0-0, 5 0-0 வரை.

அரகஜா
(ஜவ்வாதுகலந்த சந்தனம்.)

தோலா 1-க்கு ரூபா 2-0-0 முதல் ரூபா 3-8-0 வரை.

தசாங்கம்.

சேர் 1-க்கு ரூபா 1-8-0 முதல் ரூபா 2-0-0 வரை.

சுத்தமான சந்தன எண்ணெய்.

ஒரு அவுன்ஸ் பாட்டல் 1-க்கு விலை ரூபா 2 0-0.

"சந்தனமரத்தூள்".

பெரிய டப்பா 1-க்கு விலை ரூபா 3-0-0
சிறிய டப்பா 1க்கு விலை ரூபா 1-12-0

பன்னீர் (முதற்றரம்)

பெரிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 3-8-0
சிறிய பாட்டல் 1-க்கு விலை ரூபா 2-0-0

"மைசூர் அத்தர் தினுசுகள்".

கஸ்தூரி, மல்லிகைப்பூ, தாழம்பூ, மருக்கொழுந்து, குலாபி, ஷண்பகப்பூ, இரா, மஸ்மா முதலிய அத்தர்கள் தோலா 1க்கு விலை ரூபா 5 முதல் 10, 12, 15, 20, 25 வரை.

தங்களுக்குத் தேவையான வாசனைத்திரவியங்களுக்கு உடனே எழுதுங்கள்.

விலாஸம்:—
எச். சி. சந்திரா & கம்பேனி,
பெங்களூர் சிட்டி,
(இந்தியா).

(Q. 61)

## சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையும் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனாலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதானு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனால் நீர்ச்சுரிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் குதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨0. அரைருத்தலுக்கு ரூபா ௧0. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினாங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினால் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.